**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**MCOP - 19/2021**

**நாள் – 19.06.2025**

**PW – 2** யோகராஜ்

**த/பெ.** துரையன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2025)**

**2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல வேண்டி நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். விபத்தில் இறந்தபோன ராமசாமி எனது நண்பரின் அப்பா ஆவார். விபத்தானது மாலை 6.00 மணிக்கு நடந்தது. அந்த ராமசாமி தலைக்கவசம் அணியாமல் தான் இருசக்கர வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றால் சரியல்ல. விபத்தின் போது ராமசாமிக்கு சுமார் 60 வயது இருந்திருக்கும். அவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று எனக்குத் தெரியாது. அரசுப்பேருந்து சரியாக தான் அதன் ஓட்டுநர் ஓட்டி வந்தார் என்றும், ராமசாமி தான் இருசக்கர வாகனத்தை ஓட்டத் தெரியாமல் ஓட்டிச்சென்று திடீரென்று சைகை எதுவும் காண்பிக்காமல் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால், இந்த விபத்திற்கு ராமசாமியின் அஜாக்கிரதை தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியபடி 2–ம் எதிர்மனுதாரர் எந்தவொரு இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்காமல் விபத்தில் இறந்து போன ராமசாமி என்னுடைய நண்பரின் அப்பா என்ற முறையில் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.06.19 18:36:30 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**